**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண்.45/2017</u>**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு. வினோத், உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2022 ஆண்டு ஜூன் மாதம் 23-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 23.06.2022**

**பெயர் - ராஜ்குமார்**

**த/பெ - நேசமணி**

**வயது - 37**

**சாட்சி - PW1**

**ஊர் - மேலூர்**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி-</u>**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனது வாக்குமூலம் பிரமான பத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல். செய்கிறேன். 29.04.1974 தேதியிட்ட ராஜி செட்டியார் என்பவர் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வாசா ஆ 1 ஆகவும், 13.10.2003 தேதியிட்ட பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்த பத்திரத்தின் வாசா ஆ 2 ஆகவும், ராஜி செட்டியார் பெயரில் உள்ள வழக்கு சொத்திற்கான கணினி பட்டா வாசா ஆ 3 ஆகவும், 04.02.2008 தேதியிட்ட தாவா சொத்திற்கான கிஸ்து ரசீதின் அசல் வாசா ஆ 4 ஆகவும், 30.10.2013 தேதியிட்ட நேசமணி என்பவரின் இறப்பு சான்றிதழ் கணினி வழி எடுக்கப்பட்டது வாசா ஆ 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.